DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.12 /2024 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 2 P.W.3 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கருப்புசாமி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | திருமண் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.03.2026.

**முதல் விசாரணை**

நான் புக்குளம் வசித்து வருகிறேன். பாரம் ஏற்றும் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் நான் சமாதானமாக சென்று விட்டேன். யாரும் கட்டாயப்படுத்தவில்லை. ஊர் பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் பேசி பைசல் சென்று விட்டோம். விருப்பத்தோடு சமாதான மனு தாக்கல் செய்து கையெழுத்து செய்தேன். ஆகையால் இந்த வழக்கில் மேல் நடவடிக்கை வேண்டாம் என்று கேட்டு கொள்கிறேன். கடந்த 29.10.2016 ம் தேதியன்று நானும் எனது நண்பர் பன்னீர்செல்வம் எனபவரும் டீ குடிக்க சென்ற போது அங்கு கூட்டமாக இருந்தார்கள் . என்ன என்று போய் பார்த்த போது கீழே தவறி விழுந்து விட்டேன். அதில் எனக்கும் பன்னீர் செல்வம் என்பவருக்கும் காயம் ஏற்பட்டது. அதற்காக நாங்கள் உடுமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் இருந்த போது பன்னிர் செல்வம் என்பவரிடம் விசாரித்து விட்டு சென்றார்கள் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 29/10/2016 ஆம் தேதி மாலை 4 மணி அளவில் நானும் எனது நண்பர் பன்னீர்செல்வம் ராயல் பேக்கரிக்கு டீ சாப்பிட சென்ற பொழுது அங்கு இருந்த ராமசாமி மகன் கருப்புசாமி செந்தில்குமார், அருள் முத்து மற்றும் செந்தில்குமாரின் மனைவி நதியா ஆகிய இருவரும் எங்களை குறுக்காட்டி ஏற்கனவே இருந்த முன்னுரதத்தை மனதில் வைத்துக் கொண்டு எங்கள் இருவரையும் தகாத வார்த்தைகளால் திட்டி அடித்து வைத்தனர் என்றும் அதனால் எங்களுக்கு தலையில் ரத்த காயம் ஏற்பட்டது என்றும் அருகில் இருந்த பிரசாந்த் மணிகண்டன் ஆகியோர் சமாதானம் செய்த போது சென்று விட்டனர் என்று சொல்லிவிட்டு தற்சமயம் ஆஜர் எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் அவர்களை இந்த வழக்கிலிருந்து தப்பிவிக்கும் பொருட்டு அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala , B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.